1990 சனவரி 23]

கோபுரத் தொழிலாளர்களுக்கு நிதி உதவி

*2216 திரு. சோ. பால்ராஜ் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கட்டிடத் தொழிலாளிகளுக்கு நிதியுதவி வழங்கிடும் திட்டத்தின் கீழ் கலை வளர்த்திடும் கோபுரத் தொழிலாளிகளும் சேர்த்துக் கொள்ளப்படுவார்களா ?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசு ஆணை எண். 471, நிதி (முதலமைச்சர் பொது நிவாரண நிதி) துறை, நாள் 23—5—1989-ன்படி கட்டிடம் மற்றும் கட்டுமான தொழிலாளர்களுக்கு தொழிலில் ஈடுபட்டிருக்கும்போது இறந்துபோனால், நிதியுதவி அளிப்பதுபோல் கலை வளர்த்திடும் கோபுரத் தொழிலாளிகளுக்கும், நிதியுதவி அளிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

திரு. சோ. பால்ராஜ் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணிபுரிகின்றபோது கட்டிடத் தொழிலாளி இறந்துவிட்டால் அல்லது விபத்திலே தாக்கப்பட்டால் அவர்களுக்கு நிதி உதவி அளிப்பது போல, கோபுரத் தொழிலாளிக்கும் அளிக்கிறார்கள். அதுபோல சில இடங்களில் விளக்குக் கம்பங்களில் ஏறி, கோயில்களுக்குப் பக்கத்தில் ஏறி வேலை செய்கிறார்கள். அவர்களுக்கும் இந்த நிதி உதவி அளிக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

9-20 மணி

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்விக்கு விடையாக இத்திட்டத்தினால் பலன் பெறுபவர்களில் உறுப்பினர் தெரிவித்தவர்களும் இணைக்கப்பட்டுள்ளார்கள் என்பதைத் தெரிவிப்பதோடு, ஏறத்தாழ 31 பேர்கள் பட்டியலில் இடம் பெறுகிறார்கள் என்பதை நான் தெரிவிக்க விரும்புகின்றேன். உங்களது கோரிக்கையைப் பரிவுடன் செய்யவில்லை என்று நம்புவீர்களேயானால் நான் அதைப் படிக்க விரும்புகிறேன். இத்திட்டத்தினால் பலன் அடைந்தவர்கள் சலவைத் தொழிலாளி, காலணி பணி செய்யும் தொழிலாளி, தச்சர்கள், மர வண்டி கட்டுவோர், விலங்குகள் இழுத்துச் செல்லும் வண்டிகளை ஓட்டுவோர், கருமார், கத்தியல் கருமார், பொன் வேலை செய்வோர், வெள்ளி வேலை செய்வோர், கூடை முடைவோர், கல் தச்சர், கல்லலக் குடைவோர், கட்டிடத் தொழிலாளி, ஓடு செய்யும் தொழிலாளர்கள், செங்கல் அடுக்குவோர், கிணறு

[1990 சனவரி 23

தோண்டுவோர், கிணறு கட்டுவோர், வேளாண்மைத் தொழிலாளர்கள், சிறு விவசாயிகள் மற்றும் குறு விவசாயிகள், 2 முதல் 5 ஏக்கர் குறைவாக நிலங்கள் உள்ளோர், பதனீர் இறக்குவோர், கழிவுநீர் அகற்றும் தொழிலாளிகள், பூச்சி மருந்து தெளிப்பவர்கள், பனைமரம், தென்னைமரம் ஏறுவோர், மீனவர் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினராக இல்லாதவர்கள், கட்டிடம் கட்டும் கட்டுமானத் தொழிலாளர்கள், டிரக் ஓட்டுபவர்கள், ஆட்டோ ரிக்ஷா ஓட்டுபவர்கள், தனியார், கார், வாடகைக் கார் மற்றும் பஸ் ஓட்டுபவர்கள்—வாகனங்கள் சொந்தமாக இல்லாதவர்கள மட்டுமே தகுதி பெற்றவர்கள்—முடி திருத்துபவர்கள், கைவண்டி இழுப்போர், மிதிவண்டி ஓட்டுநர், தனியார் துறையில் கைத்தறி நெசவாளர்கள், மண்பாண்டம் மற்றும் பொம்மை செய்யும் குயவர், குலாளர், வீடுகளில் பணிபுரிவோர், பாம்பு பிடிக்கும் தொழிலில் ஈடுபடுவோர், சினிமாப்படம் பிடிக்கும் தொழில் சம்பந்தப்பட்ட சினிமா தொழிலாளர்கள்—சினிமா நடிகர்கள் தவிர, தினக்கூலி பெறும் செங்கல் தொழிலாளர்கள் விபத்தில் இறந்தாலோ காயமுற்றாலோ பலன் அடைவார்கள்.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டிடத் தொழிலாளர்கள் கீழே விழுந்து உயிர் இழந்தாலோ அல்லது கை, கால் சேதம் ஆனாலோ நிதி உதவி தருவதாகச் சொல்லப்பட்ட இந்த அறிவிப்பை நான் முழு மனதோடு வரவேற்பதோடு இதிலே ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். 24—9—1989 அன்று அரசாணை மூலமாக வழங்கப்பட்ட அந்தத் திட்டத்தின் காரணமாக அதற்கு முன்னால் ஒன்று அல்லது இரண்டு மாதத்திற்கு முன்னாலே பாதிக்கப்பட்டவர்களுக்கு நிதி உதவி கிடைக்காமல் போய்விடுகிறது. குறிப்பாக எட்டையாபுரத்தைச் சேர்ந்த முனுசாமி என்ற ஒரு கொத்தனார் கீழே விழுந்து கால் இழந்து மருத்துவமனைக்குச் சென்று பின்னர் எந்தவிதமான நிவாரண உதவியும் இல்லாமலே இருந்தார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம், முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ஏதாவது அந்தக் குடும்பத்துக்கு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டு இருந்தேன். அதுமட்டுமல்லாமல்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தங்களைப் போன்ற அனுபவம் மிக்கவர்கள் இதை ஒரு வினாவாகக் கேட்டால்தான் மற்றவர்களுக்கு வழி காட்டுவதாக இருக்கும். இதே செய்தி இதே அவையில் ஒரு தடவை தெரிவிக்கப்பட்டதாக எனக்கு நினைவு.

திரு. சோ. அழகர்சாமி ; பேரவைத் தலைவர் அவர்களே, இது அல்ல. ஆகவே, இதுபற்றி சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலும், மற்ற அதிகாரிகளிடத்திலும் கேட்டபோது, அந்த விபத்து அரசாணையில் குறிப்பிட்டுள்ள தேதிக்கு முன்பு இருப்பதனால், எந்தவிதமான உதவியும்

செய்ய முடியவில்லை என்று சொல்கிறார்கள். அந்த வயோதிகத் தாயினுடைய பராமரிப்பிலே விறகு பொறுக்கித் தான் அந்தப் பையனைப் பாதுகாக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு சில நேரங்களில் அந்த விதிகளைக் கொஞ்சம் தளர்த்தி, அப்படிப் பாதிக்கப்பட்டவர்களுக்கும் நிதி உதவி கிடைப்பதற்கு அந்தத் திட்டத்திலே ஏற்பாடு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்குத் தெரிவித்ததாக உறுப்பினர் கூறுகிற காரணத்தால் நான் அது குறித்து விளக்கம் அளிக்க விரும்புகின்றேன். மாதக் கணக்கு மாற்றத்தால் மாத்திரமல்ல, ஆண்டுக் கணக்கிலே மாற்றம் இருந்தாலும் கூட அதைப் பொருட்படுத்தாமல், இத்தகைய உதவிகளை அரசு வழங்கி வருகிறது. அவ்வப்போது பத்திரிகைகளில் கூட அந்தச்செய்திகள் வருகின்றன. பத்திரிகைகளில் செய்தி வருவதற்குக் காரணமே இப்படி யாராவது உதவிகளைப் பெறாமல் இருந்தால் அவர்கள் மனு செய்ய வேண்டும் என்கிற அந்த நோக்கத்தோடு தான் பத்திரிகைகளிலே அந்தச் செய்திகள் வெளியிடப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகர்சாமி சொன்ன கருத்தின்படி, அந்தத் தேதிக்கு முன்பு நடைபெற்ற சம்பவமாக அது இருக்கிறது. ஆகவே உதவி அளிக்க முடியாது என்று கூறப்பட்ட அந்த நிகழ்ச்சியை இன்றைக்கே அவர்கள் எனக்குத் தருவார்களேயானால் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : இன்னும் கொஞ்சம் விளக்கம் தேவையானால்....உறுப்பினர்கள் கேட்பார்கள் என்று எதிர்பார்த்தேன்.

9-25 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேட்பதற்கு உறுப்பினர்கள் இன்னும் இருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : யார் யாருக்கு எவ்வளவு தரப்படுகிறது என்பதுபற்றிய குறிப்பு என்னிடம் இருக்கிறது. அதையும் இந்த அவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

தோள்களில் 2 கரங்களையும் இழந்ததற்கு — இடுப்பிலிருந்து இரண்டு கால்களை இழந்ததற்கு — ரூ. 10,000.

2 கால்கள், கரங்கள் ஆகியவை முழுமையாகச் செயலற்றுப் போனதற்கு — 2 கால்கள் இழந்ததற்கு, ஒரு கால் மற்றும் ஒரு கை முழுமையாக செயல் அற்றுப் போனதற்கு — ரூ. 10,000.

[1990 சனவரி 23

தோளுக்குக் கீழே ஆனால் மணிக்கட்டுக்கு மேலே கரம் இழந்தவர்கள் இடுப்பிற்கு கீழே காலில் கணுக்காலுக்கு மேலே கால் இழந்ததற்கு—ஒருகண் இழந்ததற்கு ரூ. 7,000.

மணிக்கட்டிலிருந்து கைகள் இழந்ததற்கு—கணுக்காலிலிருந்து பாதங்களை இழந்ததற்கு — ஒரு கால் அல்லது ஒரு கரம் முழுமையாகச் செயலற்றுப் போனதற்கு — ரூ. 5,000.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகர்சாமி அவர்கள் சொன்ன கருத்தோடு ஒரு சின்ன வினாவையும் நான் எழுப்ப ஆசைப்படுகிறேன். இந்தத் திட்டத்திற்கு முன்னாலிருந்த திட்டத்தில் கட்டிடத் தொழிலாளர்கள், கைவினைஞர்கள், தச்சர்கள், கருமார்கள் என்று நமது அமைச்சர் அவர்கள் 33 தொழிலாளர்களைப்பற்றி சொன்னார்கள். அவர்களெல்லாம் மாதம் ரூ. 10 ஆக ரூ. 500, ரூ. 600 என்று நிறைய பணம் கட்டி இருக்கிறார்கள். அந்த பணத்தை இப்போது திரும்பக் கொடுக்கும் போது ரூ. 10-க்கு 6 ரூபாய் என்று கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறதுஅரசு. அது தொழிலாளர்கள் மத்தியில் மிகுந்த அதிருப்தியை ஏற்படுத்தியிருக்கிறது. எனவே, அவர்கள் கட்டிய பணத்தோடு ஒரு நாமினல் இன்டரஸ்டையும் சேர்த்துக் கொடுப்பதற்கு அரசு வழிவகை செய்யுமா என்று அறிய ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் அளித்த விளக்கங்களுக்கும் இந்த வினாவுக்கும் கொஞ்சமும் தொடர்பில்லை. ஆனாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவர்னர் உரையின்மீது பேசும்போதே இதைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஏற்கெனவேயும் குறிப்பிட்டிருக்கிற காரணத்தால் அதுபற்றிய விவரங்கள் தயாரிக்கப்படுகின்றன. முன்பிருந்த அரசு அப்படி ஒரு இன்சூரன்ஸ் திட்டத்தைக் கொண்டு வந்தது உண்மை. ஆனால் அதில் 4 லட்சம் பேர் அளவுக்குத் தான் கலந்துகொண்டு பணம் கட்டி வந்தார்கள். பலபேர் பாதியிலே நிறுத்திவிட்டார்கள். அந்தக் கணக்கையெல்லாம் சரி பார்த்து அவர்களுக்கெல்லாம் திருப்பி அனுப்பக்கூடிய முயற்சியை தற்போது அரசு மேற்கொண்டிருக்கிறது.

திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைகளிலே ஆதிவாசிகள் சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் பெரிய பெரிய மரங்களின்மீது ஏறி, ''கல்பாசம்'' என்ற பொருளை ஆதிவாசிகளுடைய சொசைட்டிகளுக்குச் சேகரித்து வருகிறார்கள். ஒரு கையை மேலே பிடித்துக்கொண்டு இன்னொரு கையால் கோடாறியால் கல்பாசத்தைக் கொத்தி எடுக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலையில் எதிர்பாராத நேரத்தில் கை நழுவி கீழே விழுந்து பலபேர் உயிரிழந்திருக்கிறார்கள். பலர் கால் மற்றும் கைகளை இழந்திருக்கிறார்கள்.

1990 சனவரி 23]

அதேபோன்று வனங்களிலே இருக்கிற கல்பாசம் போன்ற பொருட்களைச் சேகரிக்கிறபோது யானை அல்லது கரடி போன்ற மிருகங்களால் அடித்துத் துன்புறுத்தப்பட்டும் பலர் இறந்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஆதிவாசிகள் சமுதாயத்தைச் சார்ந்தவர்களுக்கு கருணைகொண்டு ரூ. 15,000 கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, காடுகளில் இதுபோன்ற இயற்கை அல்லாத மரணங்களுக்கு ஆட்படுகிறவர்களுக்கும் இந்த அரசு கூடுமான வரையில் நிதியுதவி அளித்து வருகிறது. கடந்த 2 வாரங்களுக்கு முன்புகூட ஏற்கெனவே 3 அல்லது 4 ஆண்டுகளுக்கு முன்பு யானையால் இறந்து விட்ட காட்டுவாசி ஒருவர் குடும்பத்திற்கு ரூ. 5,000 நிதியுதவி வழங்கப்பட்டிருக்கிறது.

திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் சொன்ன பட்டியலில் குடிநீர் வடிகால் வாரியத்தில் பணிபுரிந்து ஒவ்வொரு கிராமமாகச் சென்று ஆழ்குழாய்க் கிணறு தோண்டிவரும் தொழிலாளர்களும் சேர்க்கப்படுவார்களா என்று அறிய விரும்புகிறேன் — சேர்க்கப்பட வேண்டுமென்று வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : தலைவர் அவர்களே, இப்படிப்பட்டவர்கள் அனைவருமே சேர்க்கப்படுவார்கள் என்று நான் ஏற்கெனவே பதில் சொல்லிவிட்டேன். திருமதி பாப்பா உமாநாத் அவர்கள் கேள்வி கேட்க வேண்டுமென்ற ஆசை காரணமாக திரும்பவும் கேட்டிருக்கிறார்கள். நான் ஏற்கெனவே பதில் சொல்லிவிட்டேன்.

திரு. எம். முத்தையன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, காட்டிலே கரடியால் பாதிக்கப்பட்ட சில மலைவாசிகள் — நம்முடைய அறிவிப்புக்கு முன்னாலே பாதிக்கப்பட்ட சிலர் இன்னமும் உயிரோடு வீட்டை விட்டு நகர முடியாமல் அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கும் ஏதாவது நம்முடைய கருணையான அரசு உதவி செய்ய முன்வருமா என்று விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி ; தலைவர் அவர்களே, கரடியால் உண்மையிலேயே பாதிக்கப்பட்டிருந்தால் அவர்களுக்கு உதவி அளிக்கப்படும். பாதிக்கப்பட்டதாகக் கரடி விட்டால் உதவி கிடையாது. (சிரிப்பு).

9—30 மணி

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரவர்கள் குறிப்பிட்ட அந்தத் திட்டத்தின் கீழ் 33 வகையைச் சேர்ந்

தவர்கள்—விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி வழங்கக்கூடிய இந்தத் திட்டத்திலே இதுவரைக்கும் இந்தத் திட்டத்தின் கீழ் பயன் அடைந்தவர்கள் எவ்வளவு பேர்கள்? அப்படி இந்தப் பயன் கோரி வந்த நிலுவையில் இருக்கக் கூடிய மனுக்கள் ஏதாவது உண்டா? அப்படி இருந்தால் எத்தனை இருக்கின்றன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.

திரு. பி. எச். பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரவர்கள் ஒரு கண் போனால் இவ்வளவு, ஒரு கால் போனால் இவ்வளவு, இடுப்புக்குக் கீழே போனால் இவ்வளவு என்றெல்லாம் படித்தார்கள். அரசு எப்படி இந்த ரேட்டை பிக்ஸ் பண்ணுகிறது என்பதை நான் தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன். காரணம் 'Fatal Accident Act' என்று ஒரு ஆக்ட் இருக்கிறது. 'Accident claims Journal' என்ற ஒன்று ஆண்டு தோறும் வந்து கொண்டிருக்கிறது. அதன் அடிப்படையில் பிக்ஸ் பண்ணினால் காலுக்கு 25,000 ரூபாய்க்கு மேல் வரும். கண்ணுக்கு வேறு. காரணம் 'Permenent disability' என்றால் கொஞ்சம் அதிகம். சாவை விட கொஞ்சம் அதிகமாகக் கொடுப்பார்கள். காரணம், வாழ்நாள் முழுவதும் கஷ்டப்பட வேண்டியிருக்கின்ற நிலையில் அப்படிக் கொடுக்க வேண்டிய நிலை இருக்கும். ஆகவே அரசு எந்த அடிப்படையில் பிக்ஸ் பண்ணுகிறது என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இன்னொன்று. முதலமைச்சரவர்கள் கரடி விடுவது என்று சொன்னார்கள். நான் கேட்டிருக்கிறேன். ஆனால் உண்மையான பொருள் தெரியாது. அந்தப் பொருளை விளக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : தலைவர் அவர் அவர்களே, கரடி விடுகிற கலை திரு பி. எச். பாண்டியன் அவர்களுக்குப் பழக்கமான கலை. (சிரிப்பு)

திரு. ப. சுந்தரம் ; மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, என்னுடைய தொகுதியிலே ஏலகிரி மலையிலே யானைகளால் தாக்கப்பட்டு இரண்டு சவரத் தொழிலாளர்கள் இறந்துவிட்டார்கள். இன்னும் அதற்கு உண்டான மானியம் கிடைக்கவில்லை. உடனடியாக அது கிடைப்பதற்கு வழிவகை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். கரடிகள், குதிரைகள், யானைகள் ஆகியவற்றையெல்லாம் அதிகமாக இந்த அவையிலே கொண்டு வராதீர்

கள். ஏற்கனவே பாதிக்கப்பட்டவர்களுக்கு, அதனால் இறந்த வர்களுக்கு நிதி உதவி செய்யும் இந்த அரசு என்று தெளிவாகத் தெரிவித்ததற்குப் பிறகு திருப்பித் திருப்பியும் கேட்டுக்கொண்டு இருப்பது அவை நேரத்தை விணாக்குவதாக நான் கருதினால் மன்னிப்புக்கு உரியவனாக ஆவேன் என்று நம்புகிறேன்.

நிலவரி தள்ளுபடி

*2474 திரு. வெ. இராசு ; மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வறட்சியால் பாதிக்கப்பட்ட புதுக்கோட்டை மாவட்டத்தில் நிலவரி தள்ளுபடி செய்யும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : தலைவர் அவர் களே, புதுக்கோட்டை மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு 1398 பசலி ஆண்டுக்கு நிலவரி முதலியவற்றை தள்ளுபடி செய்தும், அரசுக்குச் செலுத்த வேண்டிய நிலவரி பாக்கி மற்றும் அரசு கடன்கள் வசூலிப்பதை அடுத்த பசலி ஆண்டுக்கு தள்ளி வைத்தும், அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

திரு. வெ. இராசு ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, புதுக்கோட்டை மாவட்டம் என்பது மிகவும் பின் தங்கிய மாவட்டமும், வறட்சி மாவட்டமும் ஆகும். தென் மாவட்டங் களில் அதிகமாக, பரவலாக மழை பெய்திருந்தாலும் புதுக் கோட்டை, இராமநாதபுரம் போன்ற மாவட்டங்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. நடப்பு பசலியிலே இந்த ஜனவரி யிலேயிருந்து வசூல் ஆரம்பித்து விட்ட காரணத்தால் அங்குள்ள மக்கள் நில வரிகளைக் கட்டுவதற்கும், அங்குள்ள விவசாயப் பெருங்குடி மக்கள் மீண்டும் ஏதாவது தொழில்கள் தொடங்கு வதற்கும், அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்து கின்றன வகையிலே ஏதாவது வறட்சிப் பணிகளை ஆரம்பித் தும், நிலவரிகளைத் தள்ளுபடி செய்தும், மற்றும் நீண்ட காலக் கடன்களையெல்லாம் தள்ளுபடி செய்தும் அரசு உதவி செய்ய இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : தலைவரவர் களே, வடகிழக்குப் பருவமழை இயல்பாகப் பெய்வதைக் காட்டி லும் 43 சதவிகிதம் குறைச்சலாகப் பெய்துள்ளது. அதன் காரண மாகப் பாதிக்கப்பட்ட மாவட்டங்கள் 11. அதிலே புதுக்கோட் கோட்டை மாவட்டத்தைப் பொறுத்தவரை, அறந்தாங்கி, ஆவுடையார்கோவில், ஆலங்குடி, கந்தர்வக்கோட்டை, குளத்